Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.94/2019 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.1 |
| Name: | திருமதி.முத்து |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 22.11.2023. | |

**எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் : 11.36

1) நான் தற்போது படந்தாலில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் சாத்தூர் பெருமாள் கோவில் தெருவில் குடியிருந்து வந்தேன். கடந்த 03.12.2018 ம் தேதி நான் 9 மாத கர்ப்பிணியாக இருந்ததால் பரிசோதனைக்காக சாத்தூர் அரசு மருத்துவமனை சென்றிருந்தேன். அப்போது பணியில் இருந்த மருத்துவர் மீரா என்பவர் என்னை பரிசோதனை செய்துவிட்டு எனக்கு இரத்தம் குறைவாக இருப்பதாகவும், இரத்தம் ஏற்ற வேண்டும் என்று கூறினார்.

2) எனது கணவர் தங்கபாண்டி கடிதம் மூலம் சிவகாசி அரசு

மருத்துவமனை சென்று அங்கு இரத்தம் வாங்கி வந்தார். எனது கணவர் வாங்கி வந்த இரத்தத்தை சாத்தூர் அரசு மருத்துவமனையில் அப்போது பணியில் இருந்த செவிலியர் எனக்கு இரத்தத்தை ஏற்றினார். இரத்தம் ஏற்றியவுடன் எனக்கு உடம்பு குளிர் அதிகமாக இருப்பதாக கூறினேன். அதற்கு செவிலியர் இரத்தம் ஏற்றியதால் அப்படி தான் இருக்கும் என்றும் போக , போக சரியாகிவிடும் என்று ம் கூறினார்.

3) 05.12.2018 ம் தேதி பணியில் இருந்த மருத்துவர் என்னை பரிசோதனை பார்த்துவிட்டு உடம்பு சரியாகிவிட்டதாகவும், நீங்கள் வீட்டிற்கு செல்லலாம் என்று கூறி மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து அனுப்பினார். வீட்டிற்கு சென்ற ஒரு வார காலமாக எனக்கு உடல்நிலை சரியில்லாமலும் அடிக்கடி வயிற்று போக்கு ஏற்பட்டது. அதனால் எனது கணவர் என்னை பார்த்து பயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு செல்லலாம் என்று கூறி 17.12.2018 ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அன்றைய தினமே உள்நோயாளியாக அனுமதித்து என்னிடமிருந்து பரிசோதனைக்காக இரத்தம் எடுத்தார்கள்.

4) 18.12.2018 ம் தேதி என்னை விருதுநகர் தலைமை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறி ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். விருதுநகர் அரசு மருத்துவமனையில் வைத்து என்னிடம் இரத்தம் எடுத்து பரிசோதனை செய்து 3 முறை எடுத்துப் பார்த்ததில் 3 முறையும் எச்ஐவி பாசிடிவ் என்று காண்பித்தது. பின்னர் என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுப்பப்பட்டு ஏற்றப்பட்ட இரத்ததில் எச்ஐவி இருப்பதை பரிசோதனை செய்யாமல் பணியில் இருந்த மருத்துவர் மற்றும்

எனக்கு இரத்தம் ஏற்றிய செவிலியர் இரத்தம் கொடுத்த சிவகாசி அரசு மருத்துவமனை லேப் டெக்னிசியன் ஆகியோரின் கவனக்குறைவால் எச்ஐவி இரத்தம் ஏற்றப்பட்டதால் எனக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்பு ஏற்பட்டது.

5) அதனால் பொது மக்கள் மத்தியில் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டும் , எனது குழந்தைக்கு பால் கொடுக்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டேன். பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக்கோரி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ( **புகார் மனு அ.சா.1/ அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி.

இல்லை.

முடியும் நேரம் : 11.49